**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**
**OS 33/2015**

**06.04.2023**

**பி.வா.சா.1 மோகன்தாஸ் த/பெ.மாரியப்ப வள்ளாலதேவர் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

என் தந்தை பெயர் மாரியப்ப வள்ளாலதேவர். என் தந்தை இந்திய தேசிய ராணுவ படையில் இருந்தவர். அவர் இந்திய தேசிய ராணுவத்திற்குண்டான பென்சனை இறக்கும்வரை பெற்று வந்தார். என் தந்தை 2008 ல் காலமானார். என் தந்தைக்கு இரு மனைவிகள். மூத்தவர் பெயர் அம்பிகா. இரண்டாவது மனைவி பிச்சைமணி. இரண்டாவது மனைவி இறந்துவிட்டார். மூத்த மனைவிக்கு இரண்டு பெண், இரண்டு ஆண் பிள்ளைகள். இரண்டாவது மனைவிக்கு இரண்டு ஆண், ஐந்து பெண் குழந்தைகள். வாதி இரண்டாவது மனைவியின் பெண் ஆவார். எனக்கு மூத்தவர். இந்த வழக்கில் 9 வது பிரதிவாதி இறந்து போன எனது தம்பி மனைவி. 10,11 பிரதிவாதிகள் இறந்த தம்பியின் பிள்ளைகள். என் தந்தையின் அனைத்து வாரிசுகளும் தரப்பினராக இவ்வழக்கில் உள்ளோம். என் சகோதரி 1/10 பங்கு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கில் கண்டுள்ள சொத்து விவரங்களில் உள்ள சர்வே எண்கள் தவறாக உள்ளது. நான் சரியாக உள்ள சர்வே எண்கள் குறித்து வழக்கில் சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் எந்த இடத்திலும் வாதி சொல்லியுள்ள சர்வே எண் தவறு என்று மறுக்கவில்லை என்றால் சரியல்ல.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**